

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 22 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 16 – திங்கள்கிழமை 01 செப்டம்பர் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 22: Thiruvalluvar Year - 2056 - Aavani 16 - Monday 01 September 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00




தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.8.2025) சென்னை விமான நிலையத்திலிருந்து ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு புறப்பட்டார்.




தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.8.2025) சென்னை விமான நிலையத்திலிருந்து ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு புறப்பட்டார்.

## நாட்டிலேயே அதிவேக வளர்ச்சிப் பாதையில் நடைபோடும்

# தமிழ்நாட்டிற்கு புதிய முதலீடுகளை ஈர்க்கப் பயணம்!

## சென்னை விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, செப்.1-**

**“நாட்டிலேயே அதிவேக வளர்ச்சிப் பாதையில் நடைபோடும் தமிழ்நாட்டிற்கு புதிய முதலீடுகளை ஈர்க்க ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்குச் செல்கிறேன்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று, சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (30.8.2025) சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்குப் புறப்படுவதற்கு முன்பாக செய்தி யாளர்களைச் சந்தித்து பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

ஒரு வார காலப் பயணமாக ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு நான் இன்று என்னுடைய பயணத்தை மேற்கொள்கிறேன். செப்டம்பர் 8-ஆம் நாள் நான் தமிழ்நாட்டிற்குத் திரும்பி வருகிறேன். இந்தப் பயணத்தில் தமிழ்நாட்டை நோக்கி தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கும், புதிய ஒப்பந் தங்களில் கையெழுத்திடுவதற்கும் திட்டமிடப் பட்டிருக்கிறது.

2021-இல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுவரைக்கும் 10 இலட்சத்து 62 ஆயிரத்து 752 கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்த்து, 922 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டிருக்கிறோம். இதன்மூலமாக 32 இலட்சத்து 81 ஆயிரத்து 32 பேருக்கு வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப் பட்டிருக்கிறது.

### ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களே ஆதாரம்!

இதில் பெரும்பாலான திட்டங்கள் நிறைவடைகின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. பலநிறுவனங்கள் ப்ரொடக்ஷனை ஸ்டார்ட் செய்துவிட்டார்கள். இந்த வளர்ச்சி வந்திருக்கிறதா? என்று கேட்பவர்களுக்கு ஒன்றிய அரசு வெளியிடுகின்ற புள்ளி விவரங்களே ஆதாரமாக (proof) இருக்கிறது.






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (30.8.2025) சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு புறப்படுவதற்கு முன்பாக செய்தியாளர்களைச் சந்தித்தார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

என்னுடைய ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திலும், தமிழ்நாடு அமைதிமிகு மாநிலமாக, திறமையான இளைஞர்கள் இருக்கின்ற மாநிலமாக, வாய்ப்புகளை ஊக்குவிக்கின்ற மாநிலமாக நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் உயர்ந்திருக்கின்ற காரணத்தால், தரவுகளுடன் எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அழைப்பு விடுத்திருக்கின்றேன்.

## கருத்துக்கணிப்புகளை விஞ்சி தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறும்!

இதுவரைக்கும், ஐக்கிய அரபு அமீரகம், ஜப்பான், ஸ்பெயின், சிங்கப்பூர், அமெரிக்கா ஆகிய ஐந்து நாடுகளுக்கு நான் பயணத்தை மேற்கொண்டு,

- அமெரிக்கப் பயணத்தில் 19 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
- ஸ்பெயின் பயணத்தில் 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
- ஜப்பான் பயணத்தில் 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
- ஐக்கிய அரபு அமீரகப் பயணத்தில் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
- சிங்கப்பூரில் ஒரு ஒப்பந்தம் – என்று, 30 ஆயிரத்து 37 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உறுதி செய்யும் 36 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மேற்கொள்ளப்பட்டு, 18 ஆயிரத்து 498 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறது.

இந்த 36 ஒப்பந்தங்களில், 23 திட்டங்கள் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் இருக்கிறது. இதன் தொடர்ச்சியாகத்தான் ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு நான் புறப்பட்டுச் செல்கிறேன்.

அங்கு மேற்கொள்ளப்படும் MoU-க்கள் பற்றி நான் ‘செய்திக் குறிப்பு’ (Press release) உங்களுக்குத் தரச் சொல்லியிருக்கிறேன். திரும்பி வருகின்ற அன்றைக்கும் நான் உங்களைச் சந்தித்து இது குறித்து விவரமாகச் சொல்ல விருக்கிறேன்.

### ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டியில் ஒரு அற்புதமான நிகழ்வு!

இந்தப் பயணத்தில், குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால், செப்டம்பர் 4-ஆம் தேதி, ஆக்ஸ்போர்டு யூனிவர்சிட்டியில் நடக்கின்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டுக் கருத்தரங்கு நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டு, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் படத்தைத் திறந்து வைக்கக்கூடிய ஒரு அற்புதமான நிகழ்வு நடைபெற இருக்கிறது.

நாட்டிலேயே அதிவேகமாக வளர்ச்சிப் பாதையில் நடைபோடும் நம்முடைய தமிழ்நாட்டை நோக்கி புதிய முதலீடுகளை ஈர்க்க நான் செல்கிறேன். உங்களுடைய வாழ்த்துகள் எனக்கு வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் அன்போடு நான் புறப்பட்டுச் செல்கிறேன் என்பதையும் உங்களிடத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

### எடப்பாடி பயணம் போன்று என் பயணம் அல்ல!

**செய்தியாளர்:** இது போன்ற பயணங்களால் தமிழ்நாட்டிற்கு உண்மையாகவே பலன் உண்டா? ஏனென்றால், அ.தி.மு.க. பொறுத்தவரையில் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பாக தொடர்ந்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது. அது பற்றி...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் : வெளிநாட்டுப் பயணத்தைப் பொறுத்தவரைக்கும், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய பழனிசாமி அவர்கள் இதுகுறித்துகூட விமர்சனம் செய்திருக்கிறார். பழனிசாமி அவர்களைப் பொறுத்தவரைக்கும் தன்னுடைய பயணங்கள் எப்படி இருந்ததோ அப்படித்தான் இந்தப் பயணங்களும் இருந்திருக்கும் என்று நினைக்கிறார். ஆனால், நான் கையெழுத்திடுகின்ற அனைத்து ஒப்பந்தங்களும் நடைமுறைக்கு வரப்போகின்றன! – வந்திருக்கின்றன!**

### புதிய வாக்காளர்கள் தி.மு.க. பக்கம் வந்துகொண்டிருக்கிறார்கள்!

**செய்தியாளர்:** தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஏழு மாதங்கள்தான் இருக்கிறது. தி.மு.க. கூட்டணிக்கு புதிய கட்சிகள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறதா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் : புதிய கட்சிகள் வருகிறதோ – வரவில்லையோ; புதிய வாக்காளர்கள் தி.மு.க. பக்கம் வந்து கொண்டிருக்கிறார்கள். அதுதான் உண்மை.**

**செய்தியாளர்:** அண்மையில் பீகாருக்குச் சென்று வந்தீர்கள். பீகாரைப் போலவே தமிழ்நாட்டிலும் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் : யார் எப்படிப்பட்ட சதியைச் செய்தாலும், அதை முறியடிக்கின்ற வல்லமை தமிழ்நாட்டிற்கு உண்டு. ஏன், பீகாரில் கூட தேர்தல் ஆணையம் நினைத்தது நடக்காது. உண்மையாகவே, நான் சென்று விட்டு வந்த அனுபவத்தைச் சொல்கிறேன். ஏனென்றால், அங்கும் மக்களை எழுச்சி பெற வைக்க தேர்தல் ஆணையம் உதவி செய்திருக்கிறது என்பதுதான் உண்மை!**

**செய்தியாளர்** : சி – வோட்டர்ஸ் கருத்துக் கணிப்புக் குறித்து உங்களுடைய கருத்து என்ன?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் : எந்தக் கருத்துக் கணிப்பாக இருந்தாலும், எல்லா கருத்துக் கணிப்புகளையும் விஞ்சி ஒரு அமோக வெற்றியைத்தான் தி.மு.க. கூட்டணி பெறப் போகிறது. அதில் எந்தச் சந்தேகமும் கிடையாது.**

### கருத்துத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை!

**செய்தியாளர்** : விஜய் அவர்களின் அரசியல் வருகை குறித்து நீங்கள் எந்த விதக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. அது குறித்து...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் : சொல்ல வேண்டிய அவசியமில்லை.**

**செய்தியாளர்** : 2026–ல் தி.மு.க.–வுக்கு – த.வெ.கதான் போட்டி அணி என்று ஆணித்தரமாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்திருக்கிறார். இந்தச் சவாலை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் : நான் அதிகம் பேசமாட்டேன். இதற்கு நான் பேசவேண்டிய அவசியமில்லை. பேச்சைக் குறைத்து செயலில் நம்முடைய திறமையைக் காட்டவேண்டும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.